எரிசக்தித் (சி3) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

**அரசு கடிதம் (நிலை) எண். 111, நாள் 10. 11. 2010.**

அனுப்புநர்

திரு பி.டபிள்யூ.சி.டேவிதார், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தலைவர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
19 A, ருக்மினி லஷ்மிபதி சாலை (மார்ஷல்ஸ் ரோடு),
எழும்பூர், சென்னை–600 008.

அய்யா,

பொருள் : மின்சாரம்–மின்கட்டணக் குறைப்பு மற்றும் இலவச மின்சாரம் அளிப்பதற்கான மானியத்தை 2010–2011 முதல் 2012–2013 வரையிலான காலத்திற்கு நீட்டிப்பது தொடர்பான ஒப்பிய பொறுப்பு கடிதம் (Commitment letter) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு அளிப்பது –ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை : தலைவர், தமிழ்நாடு மின்வாரியக் கடிதம் எண். CFC / Rev. / Dir / Tf.Cell / AEE / F.Tf. Petition / D.13 / 2010, நாள் 29.01.2010.

-----

பார்வையில் காணும் கடிதத்தின் மீது தங்களின் கவனம் ஈர்க்க விழைகின்றேன்.

2. தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் மின்சார சட்டம் 2003–ன் பிரிவுகளின்படி அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்ட இலவச மின்சாரம் மற்றும் மின்கட்டணக் குறைப்பு தொடர்பான ஒப்பிய பொறுப்பு கட்டளைகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைகளின்படி பின்வரும் வகையினைச் சார்ந்த நுகர்வோர்களுக்கு 2010–2011 முதல் 2012–2013 வரையிலான காலத்திற்கு தொடர்வது

குறித்த ஒப்பிய பொறுப்பு கடிதம் (Commitment letter) அளிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டார்:-

| வரிசை எண் | வகை | நடைமுறைக்கு வரும் காலம் |
|---|---|---|
| 1 | வீட்டு உபயோக நுகர்வோர் | 16.06.2004 முதல் |
| 2 | விவசாய நுகர்வோர்கள் (இயல்பானது) | 01.04.2004 முதல் |
| 3 | விவசாய நுகர்வோர்கள் (சுயநிதித்திட்டம்) | 01.04.2006 முதல் |
| 4 | குடிசை நுகர்வோர்கள் | 01.04.2004 முதல் |
| 5 | வழிபாட்டுத் தலங்கள் | 01.01.2006 முதல் |
| 6 | விசைத்தறி நெசவாளர்கள் (குறைக்கப்பட்ட கட்டணம்) | 01.02.2006 முதல் |
| 7 | விசைத்தறி நெசவாளர்கள் (இலவசம்) | 01.08.2006 முதல் |
| 8 | கைத்தறி நெசவாளர்கள் | 01.08.2006 முதல் |
| 9 | தெருவிளக்கு, பொது தண்ணீர் பணிகள் மற்றவை | 12.04.2007 முதல் |

3. மேற்காணும் சூழ்நிலையில், தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களின் கோரிக்கையினை அரசு நன்கு ஆராய்ந்து, மின்சார சட்டம் 2003–ன் பிரிவுகளின்படி அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்ட இலவச மின்சாரம் மற்றும் மின்கட்டணக் குறைப்பு தொடர்பான ஒப்பிய பொறுப்பு கட்டளைகள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைகளின்படி பின்வரும் வகையினைச் சார்ந்த நுகர்வோர்களுக்கு 2010–2011 முதல் 2012–2013 வரையிலான காலத்திற்கு தொடரும் என ஆணையிடுகிறது:-

| வரிசை எண் | வகை | நடைமுறைக்கு வரும் காலம் |
|---|---|---|
| 1 | வீட்டு உபயோக நுகர்வோர் | 16.06.2004 முதல் |
| 2 | விவசாய நுகர்வோர்கள் (இயல்பானது) | 01.04.2004 முதல் |
| 3 | விவசாய நுகர்வோர்கள் (சுயநிதித்திட்டம்) | 01.04.2006 முதல் |

| | | |
|---|---|---|
| 4 | குடிசை நுகர்வோர்கள் | 01.04.2004 முதல் |
| 5 | வழிபாட்டுத் தலங்கள் | 01.01.2006 முதல் |
| 6 | விசைத்தறி நெசவாளர்கள் (குறைக்கப்பட்ட கட்டணம்) | 01.02.2006 முதல் |
| 7 | விசைத்தறி நெசவாளர்கள் (இலவசம்) | 01.08.2006 முதல் |
| 8 | கைத்தறி நெசவாளர்கள் | 01.08.2006 முதல் |
| 9 | தெருவிளக்கு, பொது தண்ணீர் பணிகள் மற்றவை | 12.04.2007 முதல் |

4. தலைவர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அவர்கள் மேலே பத்தி 3–ல் காணப்படும் ஆணையினை செயல்படுத்துவது தொடர்பாக தக்க நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இக்கடிதம், நிதித்துறையின் இசைவு, அ.சா.எண்.50648/PW-II/2010, நாள் 14.10.2010–ன்படி வெளியிடப்படுகின்றது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

இ. சாந்தி
10-11-10

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

10/11/2010

<u>நகல்:-</u>

தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை–2.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (மின்சாரம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் (நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அலுவலகம், சென்னை–9.
எரிசக்தித்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
தகவல் தொடர்பு மையம், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.